Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளிக்கிழமை, ஜூலை 05, 2024 | இதழ் 83

# “இந்தியாவுக்குப் பெருமை சேருங்கள்” இந்திய ஒலிம்பிக் வீரர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடல்

சென்னை, 05 ஜூலை 2024: இந்த முறையும் நீங்கள் இந்தியாவுக்கு பெருமை சேர்ப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்" என ஒலிம்பிக் செல்லும் இந்திய வீரர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடியபோது கூறினார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் ஒலிம்பிக் போட்டி ஜூலை 26ம் தேதி முதல் ஆகஸ்ட் 11ம் தேதி வரை நடக்கவுள்ளது. இதில் பங்கேற்கும் இந்திய வீரர்கள் தீவிரமான பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். பதக்கம் வெல்ல வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயல்பட்டு வரும் நிலையில், ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வீரர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். கடந்த ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா, பி.வி.சிந்து உள்ளிட்ட சில வீரர்கள் வீடியோ கான்பிரன்ஸ் வாயிலாகவும் பங்கேற்றனர்.

வீரர்கள் மத்தியில் பிரதமர் மோடி பேசியதாவது:

நீங்கள் ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற மனநிலையில் உள்ளீர்கள். வெற்றி பெற்று திரும்பும் போது உங்களை வரவேற்கும் மனநிலையில் நானும் இருக்கிறேன். விளையாட்டு உலகின் நட்சத்திரங்களான உங்களை சந்திக்கவும், உங்களிடம் இருந்து புதிய விஷயங்களை கற்றுக்கொள்ளவும், உங்களின் கடின உழைப்பை புரிந்துகொள்ளவும் முயற்சிக்கிறேன். அதேபோல, நான் எல்லோருடனும் நேரடியாக தொடர்பு கொள்ளவும் முயற்சிக்கிறேன்.



நாம் பாரிசுக்கு விளையாட செல்கிறோம்; நமது சிறந்த திறமையை வெளிப்படுத்தப்போகிறோம். ஒலிம்பிக் கற்றலுக்கான மிகப்பெரிய களம். கற்கும் மனப்பான்மையுடன் பணியாற்றுபவர்களுக்கு கற்க வாய்ப்புகள் அதிகம். குறை சொல்லி வாழ நினைப்பவர்களுக்கு வாய்ப்புகளே கிடைக்காது. நம்மை போன்ற பல நாடுகளை சேர்ந்தவர்களும் ஒலிம்பிக் வருகிறார்கள். பல சிரமங்களையும், அசவுகரியங்களையும் எதிர்கொள்கிறீர்கள். ஆனால் உங்களின் இதயத்தில் நாடும், நமது தேசியக் கொடியும் உள்ளது. இந்த முறையும் நீங்கள் இந்தியாவுக்கு பெருமை சேர்ப்பீர்கள் என்று நான் நம்புகிறேன் என்று பேசினார்.

# “பாரதி முருகனை காப்பாற்ற உதவுங்கள்”: உயிர்காக்கும் சிகிச்சைக்கான கூட்டு நிதியை வழங்க அன்பு கோரிக்கை

சென்னை, 05 ஜூலை 2024: 2024 மே 19 அன்று நிகழ்ந்த ஒரு கடுமையான சாலைப் போக்குவரத்து விபத்தை தொடர்ந்து அவரது உயிரைக் காப்பாற்றுவதற்கான சிகிச்சைக்கு நிதி ஆதரவை வழங்குமாறு திருமதி. பாரதி முருகனின் குடும்பத்தினர் பொதுமக்களிடம் அவசர கோரிக்கையை வைத்திருக்கின்றனர். சென்னையிலுள்ள காவேரி மருத்துவமனையில் திருமதி. பாரதி தற்போது தனது உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக துணிவுடன் கடுமையான போராட்டத்தை மேற்கொண்டு வருகிறார். கடுமையான காயங்களின் பாதிப்பிலிருந்து சிகிச்சையின் மூலம் குணமடைந்து மீண்டு இயல்புநிலைக்கு வருவதற்கு நீண்டகால மருத்துவக் கண்காணிப்பும், பெரிய அளவிலான மருத்துவ பராமரிப்புகளும் தேவைப்படுகிறது. இந்த மருத்துவ செலவுகளை எதிர்கொள்ள போதுமான வசதி இல்லாத காரணத்தால் திருமதி. பாரதியின் குடும்பத்தினர், இம்பேக்ட் குரு என்ற தளத்தில் கிரவுட் ஃபண்டிங் என அழைக்கப்படும் கூட்டு நிதி திரட்டல் நடவடிக்கையை தொடங்கியிருக்கின்றனர் . அவரது இரு குழந்தைகளோடு சாலையை கடந்து சென்றபோது, திருமதி. பாரதி கடுமையான விபத்தில் சிக்கி காயமடைந்தார். மோதல் கடுமையானதாக இருந்ததால், உயிருக்கு ஆபத்தான காயங்கள் ஏற்பட்டு, அவரது உடல்நிலை மிக வேகமாக மோசமடைந்தது. விபத்தில் சிக்கியபோதும் அப்பெண்ணின் குழந்தைகள் இருவரும் லேசான காயங்களுடன் உயிர் தப்பினர். ஆனால் அக்குழந்தைகளின் தாயான திருமதி. பாரதியின் நிலைமை இன்னும் ஆபத்தான நிலையிலேயே நீடிக்கிறது. பாரதிக்கு மூளை - நரம்பியல் அறுவைசிகிச்சை செய்வதும் மற்றும் அதைத்தொடர்ந்து உயிர் பிழைப்பதற்கு தீவிர சிகிச்சைப்பிரிவில் பல நாட்கள் கண்காணிப்பும் பாரதிக்கு தேவைப்படுகிறது என்று மருத்துவர்கள் தெரிவித்திருக்கின்றனர். இப்பெண்ணின் தொடக்கநிலை மருத்துவ செலவிற்காக தங்களது அனைத்து சேமிப்புகளையும் இவரது குடும்பத்தினர் செலவிட்டனர். ஆனால், தொடர்ந்து நடைபெற வேண்டிய அறுவைசிகிச்சைக்கும் மற்றும் பிற சிகிச்சைகளுக்கும் ஏறக்குறைய ரூ.20 இலட்சம் தேவைப்படுகிறது. இந்த மிகப்பெரிய தொகையை சொந்தமாக திரட்ட இயலாத நிலையிலுள்ள இவரது குடும்பத்தினர் நல்ல மனம் படைத்த பொதுமக்களின் மற்றும் நிறுவனங்களின் உதவியை அவசரமாக எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். பாரதியின் கணவரான முருகன், இவ்விபத்திற்கு முன்பு அவர்களது குடும்பத்தில் நிறைந்திருந்த அன்பையும், பாசத்தையும் மற்றும் கனவுகளையும் கண்களில் நீர் ததும்ப நினைவுகூர்கிறார். “இந்த விபத்திற்கு பிறகு என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு அற்புதம் நடக்காதா என்று பிரார்த்தனையோடு நாங்கள் காத்திருக்கிறோம். பாரதிக்கு நேர்ந்த விபத்தால், எங்களது கனவுகளுடன், எங்களது இதயங்களும் நொறுங்கிப்போய் கிடக்கின்றன. எங்களுக்காக பாரதி அனைத்தையும் தந்தவர். எப்படியாவது சிகிச்சையின் மூலம் உயிர்பிழைத்து இந்த உலகையும், எதிர்காலத்தையும் காண்பதற்கான வாய்ப்பை பெறுவதற்கு முற்றிலும் அவர் தகுதியானவர்.” தாராள மனதுடன் மருத்துவ சிகிச்சைக்கான நிதி ஆதரவை வழங்குமாறு சமூகத்தினருக்கு பாரதியின் குடும்பம், தங்கள் கரங்களை கூப்பி, கோரிக்கை வைத்திருக்கிறது. எவ்வளவு சிறிய தொகையாக இருப்பினும், ஒவ்வொரு பங்களிப்பும் ஒரு முக்கிய பங்களிப்பை வழங்கி பாரதியை வாழவைக்கும். பாரதிக்கு தற்போது தேவைப்படுகின்ற அவசரநிலை அறுவைசிகிச்சை மற்றும் பிற செலவுகளை எதிர்கொள்ள இந்த நன்கொடைகள் உதவும். இதன் மூலம் எதிர்காலத்திற்கான நம்பிக்கையை பாரதியின் குடும்பத்திற்கு இந்த நன்கொடைகள் வழங்கும். அதிக தகவலுக்கு காணவும்: <https://www.impactguru.com/fundraiser/help-bharathy-murugan>

ImpactGuru.com




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

வெள்ளிக்கிழமை,
ஜூலை 05, 2024

# இந்திய ராணுவம் 25-வது கார்கில் விஜய் திவாஸ்ஸை நினைவுகூறும் வகையில் அனைத்து மகளிர் இருசக்கர வாகனப் பேரணியை தொடாங்கியது!



சென்னை, 05 ஜூலை 2024: கார்க்கில் விஜய் திவாஸ்ஸின் ரஜத் ஜெயந்தி மஹோத்சவ்வை நினைவுகூறும் வகையில், லடாக்கின் லெப்டினெண்ட் கவர்னர் மாண்புமிகு. பிரிக் (டாக்டர்) பி.டி. மிஸ்ரா, இருசக்கர வாகனம் ஓட்டும் 25 பெண்கள் அடங்கிய அனைத்து மகளிர் இருசக்கர வாகனப் பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். கார்கில் போரின் போது இந்திய ராணுவத்தின் நாட்டுப்பற்றுமிக்க வீரம் மற்றும் பகைவருக்கு அஞ்சாத உறுதியை நினைவுகூரும் வகையில், இந்திய ராணுவத்தால் திட்டமிடப்பட்டிருக்கும் பல்வேறு நிகழ்வுகளின் ஒரு பகுதியாக இந்த பேரணி தொடங்கப்பட்டுள்ளது. இந்த பேரணியை கொடியசைத்து தொடங்கி வைக்கும் விழாவானது, லேல பகுதியில் உள்ள ஹால் ஆஃப் ஃபேமில் நடைபெற்றது. இவ்விழா ஜெனரல் ஆபீஸர் கமாண்டிங், பயர் அண்ட் ஃப்யூரி கார்ப்ஸ், லெப்டினண்ட் ஜெனரல் ஹிட்டேஷ் பல்லா, எஸ் சி, எஸ் எம், வி எஸ் எம்மற்றும் டிவிஎஸ் மோட்டார் கம்பெனியின் ப்ரீமியம் பிரிவின் பிஸினெஸ் ஹெட் விமல் சம்ப்லி ஆகியோர் முன்னிலையில் உற்சாகமாக நடைபெற்றது. இரு சக்கர வாகனம் ஓட்டும் பெண்கள் கலந்து கொள்ளும் இந்த பேரணியில் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால், அனுபவமிக்க 25 பெண்கள் பங்கேற்றனர். இந்தியா முழுவதிலும் இருந்து ஆயுதப்படையில் சேவைப்புரியும் பெண்கள், ராணுவ வீரர்களின் வாழ்க்கைத் துணையர்கள், டி வி எஸ் அப்பாச்சி மற்றும் டி வி எஸ் ரோனின் இருசக்கர வாகனங்களை ஓட்டுவதில் தேர்ச்சி பெற்ற பெண் ஆர்வலர்கள் முழு ஈடுப்பாட்டுடனும், உறுதியோடும் இப்பேரணியில் பங்கேற்கிறார்கள். சவால்களும் சாகசங்களும் நிறைந்த இந்த முன்முயற்சியானது கார்கில் விஜய் திவாஸின் வீரமிக்க உணர்வைக் கெளரவிப்பதோடு மட்டுமல்லாமல், 'கலாச்சாரம் மற்றும் இன வேற்றுமையில் ஒற்றுமை' என்பதை முன்னிலைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தப் பேரணியானது யூனியன் பிரதேசமான லடாக் முழுவதும் சவால்கள் மிக்க பயணமாக செல்லும் வகையில் 12 நாட்களில் 2,000 கிலோமீட்டர்களுக்கும் மேலான தூரம் வரை தொடர்கிறது. இந்தப் பேரணியில் பங்கேற்கும் பெண்கள், வீரமிக்க ஆயுதப் படைகளின் தியாகத்தை நினைவுகூருவதற்கும், லடாக்கின் யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து போர் நினைவுச் சின்னங்களுக்கும் மரியாதை செலுத்துவதற்கும் வாய்ப்பளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கார்கில் போர் நினைவுச்சின்னத்தை சென்றடைவதற்கு முன்பாக, வழக்கமான பயணத்திற்கு வாய்ப்பு இல்லாத, சாகசம் புரியும் வகையில் பயணிக்க வேண்டிய லடாக் பகுதியில், உலகின் மிக உயரமான மோட்டர் சைக்கிள் பாதைகளைக் கொண்டிருக்கும் கர்துங் லா மற்றும் உம்லிங் லா ஆகியவற்றையும் பேரணி கடந்து செல்ல இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில் பேசிய டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் ப்ரீமியம் பிரிவின் பிஸினெஸ் ஹெட் திரு. விமல் சும்ப்லி கூறுகையில், "ஒரு இந்தியராக, இந்திய ராணுவம் மற்றும் இந்திய தேசத்திற்கான அவர்களின் ஒய்வு இல்லாத சேவை குறித்து நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். மேலும் அவர்களுடன் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இணைந்து இந்த சவாலான பயணத்தை மேற்கொள்வது குறித்து அறிவிப்பதில் உற்சாகமாக கொள்கிறோம். உலகளவில் 5.5 மில்லியன் டி வி எஸ் அப்பாச்சி மற்றும் டி வி எஸ் ரோனின் வாடிக்கையாளர்களைக் கொண்ட வலுவான ரைடர் சமூகமாக முன்னிலை வகிக்கும் நாங்கள், சவால்கள் நிறைந்த இந்த பகுதிகளில் பயணிக்கும் போது மோட்டார் சைக்கிள்கள் அதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். மேலும் இந்த மோட்டார் சைக்கிள்களின் அபாரமான செயல்திறன், தனித்துவமிக்க வடிவமைப்பு, அதிநவீன தொழில்நுட்பம், மிகவும் மேம்பட்ட பொறியியல் அம்சம் இவையனைத்தும் இருசக்கர வாகன ஓட்டுபவர்களுக்கு உத்வேகத்தை அளிப்பதுடன், அவர்கள் பாதுகாப்பையும், செளகரியத்தையும் உறுதி செய்கின்றன. டிவிஎஸ் மோட்டார் சார்பாக, இந்த கெளரவமிக்க பயணத்திற்காக இந்திய இராணுவத்திற்கு எங்களது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.'' என்றார்.

இந்த பேரணியானது இளையதலைமுறையினரை, குறிப்பாக இளம்பெண்கள் மற்றும் பெண்களை ஊக்கப்படுத்துவதோடு, பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பல்வேறு வகையான நிகழ்வுகள் மற்றும் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளும் உரையாடல்கள் மூலம் அனைத்து தளங்களிலும் உத்வேகத்துடன் திறம்பட செயல்படவும், இந்திய ராணுவத்துடன் மக்கள் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை முன்னெடுக்கவும் மேற்கொள்ளப்படுகிறது.

# இருதயநோய் நிபுணர்கள் கலந்து கொள்ளும் தேசிய அளவிலான மாநாட்டை சோஹோ நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்ரீதர் வேம்பு தொடங்கி வைத்தார் 1500க்கும் மேற்பட்ட இதயநோய் மருத்துவர்கள் பங்கேற்பு







சென்னை, 05 ஜூலை 2024: தேசிய இண்டர்வென்ஷனல் கவுன்சில் (என்ஐசி) 2024, கார்டியாலஜிக்கல் சொசைட்டி ஆஃப் இந்தியா, தமிழ்நாடு பிரிவு சார்பில் இருதயநோய் நிபுணர்கள் கலந்து கொள்ளும் தேசிய அளவிலான மாநாடு இன்று சென்னையில் தொடங்கியது. இதில் 1500க்கும் மேற்பட்ட இதயநோய் மருத்துவர்கள் கலந்து கொள்கின்றனர்.

தேசிய இண்டர்வென்ஷனல் கவுன்சில் (என்ஐசி) 2024, கார்டியாலஜிக்கல் சொசைட்டி ஆஃப் இந்தியா, தமிழ்நாடு பிரிவு சார்பில் இருதயநோய் நிபுணர்கள் கலந்து கொள்ளும் தேசிய அளவிலான மாநாடு இன்று தொடங்கியது. சென்னை வர்த்தக மையத்தில் 4 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் 1500க்கும் மேற்பட்ட இதயநோய் மருத்துவர்கள் கலந்து கொள்கின்றனர். சர்வதேச அளவில் புகழ்பெற்ற 25 இருதய நோய் நிபுணர்களும் உரையாற்ற உள்ளனர். இந்த மாநாடு மற்ற மருத்துவத்துறை சார்ந்த மருத்துவர்கள் மற்றும் இளம் வயது இதயநோய் மருத்துவர்கள், நிபுணர்களுடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பாக அமையும்.

இந்த மாநாட்டில், வெளிநாட்டில் செய்யப்பட்ட 20 சிறப்பு சிகிச்சை குறித்தும், 60 முன்னணி இருதயநோய் நிபுணர்கள் செய்த சிறப்பு சிகிச்சை குறித்தும் விளக்கக் காட்சிகள் அளிக்கப்பட உள்ளது. அதுமட்டுமின்றி பயிற்சிப்பட்டறை மூலம் மருத்துவர்களுக்கான பயிற்சிகளும் அளிக்கப்பட உள்ளது. இதன் மூலம் மாநாட்டில் கலந்து கொள்ளும் இளம் மருத்துவர்களின் திறன்கள் மேம்படும் என கருதப்படுகிறது. மேலும் இதய நோய்களின் சிகிச்சை, நடைமுறைகள் மற்றும் அதற்கான செலவுகள் பற்றிய தரவு வெளியிடப்பட இருப்பது இந்த என்ஜசி 2024 மாநாட்டின் சிறப்பம்சம் ஆகும். அடுத்ததாக இண்டர்வென்ஷனல் கார்டியாலஜி துறை கண்டுபிடிப்பாளருக்காக பிரத்யேக மையமும் தொடங்கப்பட உள்ளது.

இந்த மாநாட்டை தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையின் தலைவரும், மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவருமான டாக்டர் எஸ். குருசங்கர் முன்னிலையில், சோஹோ நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்ரீதர் வேம்பு தொடங்கி வைத்தார்.

இதில் என்ஜசி 2024 அமைப்புத் தலைவரும் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை இருதயநோய் நிபுணருமான டாக்டர் வி. முருகேசன் மற்றும் என்ஐசி 2024 அமைப்புச் செயலாளரும், தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை இருதயநோய் நிபுணருமான டாக்டர் பி. கேசவ மூர்த்தி உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

மேலும் சிஎஸ்ஐயின் பொதுச் செயலாளர் டாக்டர் டி.பி. சின்ஹா, தலைவர் டாக்டர் பி.சி. ராத், மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் டாக்டர் சஞ்சய் தியாகி, அவர்களுடன் அறிவியல் தலைவர் டாக்டர் பி.கே. சாஹூ, தலைமை ஒருங்கிணைப்பாளர் டாக்டர் என் பிரதாப்குமார் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்த மாநாடு குறித்து என்ஜசி 2024 அமைப்புச் செயலாளரும், தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை மூத்த இருதயநோய் நிபுணருமான டாக்டர் கேசவ மூர்த்தி நிருபர்களிடம் கூறியதாவது:

இந்த மாநாட்டில் 3000க்கும் மேற்பட்ட இதயநோய் நிபுணர்களை பிரதிநிதித்துவம் படுத்த இருக்கிறார்கள். இதன் மூலம் நாட்டில் இருதய மருத்துவத்தை வளர்ப்பதில் ஒரு மைல்கல்லாக அமையும்.

மேலும் நாடு முழுவதும் 1700க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட இருதயவியல் தரவுகளை வெளியிடுவது இந்த மாநாட்டின் சிறப்பம்சமாக இருக்கிறது. இந்த தரவை சேகரிக்க மற்றும் பகுப்பாய்வுகள் செய்ய ஒரு திறமையான குழு உருவாக்கப்பட்டது. மேலும் இந்த தரவுகள் இந்தியாவின் சுகாதாரத் திட்டமிடலுக்கு முக்கியமானதாக இருக்கும். இந்த தரவுகள் இருதயவியல் ஆராய்ச்சியில் ஒரு மைல்கல்லாக இருக்கும். அத்துடன் இண்டர்வென்ஷனல் கார்டியாலஜி துறை கண்டுபிடிப்பாளர்களுக்காக பிரத்யேக மையமும் தொடங்க உள்ளது.

இந்த மாநாட்டில் அதிநவீன தொழில்நுட்பம், இருதயவியல் துறை பற்றிய புதிய தலைப்புகளில் 500 மேற்பட்ட விளக்கக் காட்சிகள் ஒலிபரப்பு செய்ய இருக்கிறார்கள். அதுமட்டுமில்லாமல் பயிற்சி அமர்வுகள், சிம்போசியம், கரோனரி குறித்து தீம் அடிப்படையிலான அமர்வுகள், சிடிஓ இண்டர்வென்ஷனல் ஆகியவையும் இருக்கும்.

முக்கியமாக இந்த மாநாடு தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே இதில் பங்கேற்கும் மருத்துவ மாணவர்களுக்கு கல்லூரியில் விடுப்பு எடுத்துக் கொண்டதாக கருதப்படாது. இது புதிய தலைமுறை இளம் மற்றும் ஆற்றல்மிக்க இருதயநோய் மருத்துவர்களை பங்கேற்பதை ஊக்குவிக்கும்." என்று கூறினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# முடிவுக்கு வந்தது 14 ஆண்டு கன்சர்வேட்டிவ் ஆட்சி பிரிட்டனில் தொழிலாளர் கட்சி அபார வெற்றி: புதிய பிரதமராகிறார் கெயர் ஸ்டார்மர் 'படுதோல்விக்கு நான் முழு பொறுப்பேற்கிறேன்': ரிஷி சுனக்



சென்னை, 05 ஜூலை 2024: பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில் 14 ஆண்டுகளுக்கு பிறகு தொழிலாளர் கட்சி அபார வெற்றி பெற்றுள்ளது. கெயர் ஸ்டார்மர் பிரதமராக பதவி ஏற்க உள்ளார். இந்த தோல்விக்கு முழு பொறுப்பேற்கிறேன் என பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தின் பதவி காலம் 5 ஆண்டுகள் ஆகும். அந்த வகையில் தற்போதைய பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான அரசின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு (2025) ஜனவரி மாதம் வரை உள்ளது. ஆனால் நாடாளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்த முடிவு செய்த ரிஷி சுனக் ஜூலை 4ந் தேதி பொதுத்தேர்தல் நடைபெறும் என கடந்த மே மாதம் அறிவித்தார்.

அதன்படி 650 இடங்களை கொண்ட நாடாளுமன்ற மக்களவைக்கான (ஹவுஸ் ஆப் காமன்ஸ்) தேர்தல் நேற்று நடந்தது. வாக்களிக்க தகுதி உடைய சுமார் 4 கோடியே 60 லட்சம் வாக்காளர்களுக்காக நாடு முழுவதும் 40 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

உள்ளூர் நேரப்படி காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கிய நிலையில் மக்கள் ஆர்வமுடன் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களின் ஜனநாயக கடமையை ஆற்றினர். தற்போதைய பிரதமரும், ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் பிரதமர் வேட்பாளருமான ரிஷி சுனக், மனைவி அக்ஷதா மூர்த்தியுடன் வடக்கு இங்கிலாந்தில் உள்ள தனது சொந்த தொகுதியான ரிச்மண்ட் மற்றும் நார்தாலர்டனில் உள்ள வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களித்தார்.

அதேபோல் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் தலைவரும், பிரதமர் வேட்பாளருமான கெயர் ஸ்டார்மர், மனைவி விக்டோரியாவுடன் வடக்கு லண்டனில் உள்ள கேம்டன் நகரில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் தனது வாக்கை செலுத்தினார். பிரிட்டன் நேரப்படி இரவு 10 மணி வரை வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது.

அதை தொடர்ந்து வாக்கு எண்ணும் பணிகள் உடனடியாக தொடங்கின. மொத்தம் உள்ள 650-ல் 326 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும் கட்சி ஆட்சியைப் பிடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு படுதோல்வியே கிடைக்கும். முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 418 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கும் என தெரிவித்தன. வாக்கு எண்ணிக்கை முடிவுகளும் அதையே காட்டின. வாக்கு எண்ணிக்கை தொடங்கியதில் இருந்தே தொழிலாளர் கட்சி முன்னிலை பெற்றது. 650 இடங்களில் பாதிக்கும் மேலான இடங்களின் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன

தற்போதைய நிலவரப்படி கெயர் ஸ்டார்மரின் தொழிலாளர் கட்சி 400 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. ரிஷி சுனக்கின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி 112 இடங்களில் மட்டுமே வெற்றிப் பெற்றுள்ளது. மேலும் பெரும்பாலான இடங்களில் தொழிலாளர் கட்சியே முன்னிலை வகிக்கிறது. இதன் மூலம் 14 ஆண்டுக்குப் பிறகு தொழிலாளர் கட்சி ஆட்சியைப் பிடித்துள்ளது. கடந்த 2005ம் ஆண்டு நடந்த தேர்தலில் தொழிலாளர்கள் கட்சி வெற்றி பெற்று, கார்டன் பிரவுன் பிரதமராக இருந்தார். 2010 தேர்தலில் அக்கட்சி தோல்வி அடைந்தது. இந்த வெற்றியின் மூலம் 61 வயதான கெயர் ஸ்டார்மர், பிரிட்டன் பிரதமராக பதவியேற்கிறார்.

தேர்தல் வெற்றியை அடுத்து லண்டனில் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் வெற்றி உரையாற்றி கெயர் ஸ்டார்மர் பேசுகையில், "தேர்தல் வெற்றியின் மூலம் மக்கள் மத்தியில் ஒரு நிம்மதி ஏற்பட்டிருக்கிறது. இந்த மாற்றத்தை நாம்தான் செய்தோம். இதற்காக நீங்கள் (ஆதரவாளர்கள்) பிரச்சாரம் செய்தீர்கள், போராடினீர்கள், வாக்களித்தீர்கள். இப்போது மாற்றம் வந்துவிட்டது. நீங்கள் நாட்டை மாற்றிவிட்டீர்கள். இந்த வெற்றி நாம் ரசிப்பதற்கானது. அதேநேரத்தில் நம் முன்னால் சவால்கள் காத்திருக்கின்றன. நாட்டை புதுப்பிக்கும் பணி நம் முன் உள்ளது. பிரிட்டனை மீட்டெடுக்க நாம் தயாராக இருக்கிறோம். நாட்டின் மீதிருந்த ஒரு சுமை நீங்கிவிட்டது. ஆம், இறுதியாக அந்த சுமை நீக்கப்பட்டுவிட்டது.

இந்த பெரிய தேசத்தின் புதிய விடியல் தற்போது தோன்றி இருக்கிறது. இனி நாம் நம்பிக்கையின் ஒளியுடன் நடக்கலாம். நாட்டு மக்கள் நமக்கு ஆணையிட்டுள்ளார்கள். இந்த ஆணை, ஒரு பெரிய பொறுப்புடன் வந்திருக்கிறது. இன்று முதல் நாம் புதிய அத்தியாயத்தைத் தொடங்குவோம். மாற்றத்திற்கான வேலையை இப்போதே தொடங்குவோம் என தெரிவித்தார்.

கன்சர்வேட்டிவ் கட்சியின் ரிஷி சுனக் தனது தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார். தோல்விக்கு தானே முழு பொறுப்பு ஏற்பதாகவும் ரிஷி சுனக் கூறியுள்ளார்.

தோல்வி குறித்து ரிஷி சுனக் கூறுகையில், "தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றுள்ளது. நான் கெயர் ஸ்டார்மரை தொடர்பு கொண்டு பேசினேன். அவருக்கு எனது வாழ்த்தினை தெரிவித்தேன். இன்று ஆட்சி அதிகாரம் அமைதியான முறையில் கைமாறியுள்ளது. நம் நாட்டின் எதிர்காலம் சார்ந்து நம் அனைவருக்கும் நம்பிக்கை அளிக்கும் வகையில் ஆட்சி அமைய வேண்டும். இந்த தோல்விக்கு நான் முழு பொறுப்பேற்கிறேன். என்னை மன்னிக்கவும்" எனத் தெரிவித்தார். அவர் வடக்கு இங்கிலாந்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி, உறுதியற்ற ஆட்சித் தன்மை, உள்கட்சி சண்டையில் கன்சர்வேட்டிவ் கட்சி தொடர் சறுக்கல்களை கண்டது. கடந்த 14 ஆண்டு கால ஆட்சிக்காலத்தில் டேவிட் கேமரூன், தெரெசா மே, போரிஸ் ஜான்சன், லிஸ் ட்ரஸ், ரிஷி சுனக் என 5 வெவ்வேறு பிரதமர்கள் இருந்தனர்.

# நீங்கள் நலமா திட்டத்தின் கீழ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பயனாளிகளுடன் போனில் பேச்சு அரசு உதவிகள் முறையாக வருவதாக கருத்து தெரிவித்தனர்






சென்னை, 05 ஜூலை 2024: நீங்கள் நலமா திட்டத்தின் கீழ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்களில் பயன் பெற்றவர்களிடம் போனில் பேசினார். அப்போது அவர்கள், அரசு உதவிகள் முறையகாக வருவதாக கருத்து தெரிவித்தனர்.

தமிழக அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளை தொடர்பு கொண்டு, அந்த நலத்திட்டங்கள் குறித்த கருத்து மற்றும் பின்னூட்டங்களைக் கேட்டறியும் முதலமைச்சரின் முகவரி துறைக்கான நீங்கள் நலமா? என்ற திட்டத்தை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த மார்ச் 6ம் தேதி தொடங்கிவைத்தார். மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் உரியவர்களுக்கு சென்றடைவதை உறுதி செய்யும் நோக்குடன் இந்த திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது.

அரசு துறைகளின் செயல்பாட்டில் உள்ள முக்கியமான நலத்திட்டங்கள் மற்றும் அரசு துறைகளால் வழங்கப்படும் சேவைகள் மூலம் பயன்பெற்ற பயனாளிகளிடம் இருந்து கருத்துகள் மற்றும் பின்னூட்டம் பெறப்படுகிறது. நீங்கள் நலமா? வலைத்தளத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து அரசு திட்டங்கள் குறித்த விவரத் தொகுப்பு பதிவேற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரசு திட்ட பயனாளிகளை, சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து முதல்-அமைச்சர் மு க ஸ்டாலின் நேற்று நேரடியாக வீடியோ அழைப்பு மற்றும் போன் மூலமாக தொடர்பு கொண்டு பேசினார். அதன் விவரம் வருமாறு:-

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற கோவையைச் சேர்ந்த சித்ரலேகாவிடம் போனில் பேசிய விவரம்:-

முதலாமைச்சர் மு.க. ஸ்டாலின்:- வணக்கம், உங்க பெயர் என்ன? எந்த ஊர்?

சித்ரலேகா:- சார், நான் சித்ரலேகா. எனது ஊர் கோயம்புத்தூர்.

முதலமைச்சர்:- என்ன தொழில் பண்றீங்க?

சித்ரலேகா:- நான் பொறியியல் உற்பத்தி நிறுவனம் வைத்திருக்கிறேன்.

முதலமைச்சர்:- அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தைப் பற்றி எப்படி தெரிந்து கொண்டீர்கள்?

சித்ரலேகா:- மாவட்ட தொழில்கள் மையம் என்ற டிக் நிறுவனத்திற்கு கடன் கேட்க சென்றிருந்தேன். அப்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்காக முதலமைச்சர் சிறப்பு திட்டத்தை கொண்டு வந்திருப்பதாக கூறினார்கள். பட்டியலினத்தை சேர்ந்த நாங்கள், அந்த திட்டத்தை பயன்படுத்திக்கொண்டோம்.

முதலமைச்சர்:- விண்ணப்பிப்பதற்கு எளிதாக இருந்ததா?

சித்ரலேகா:- ஆமாம் சார். டிக் அலுவலகத்தில் எல்லாருமே ரொம்ப உதவி செய்தனர்.

முதலமைச்சர்:- அதற்கு எவ்வளவு நாட்கள் ஆனது?

சித்ரலேகா:- முதலில் கலெக்டர் அலுவலகத்தில் நேர்காணல் வைத்தனர். அதன் பிறகு ஒரு மாதத்தில் சென்னைக்கு வந்து உங்களிடம்தான் அந்த உதவியை பெற்றேன்.

முதலமைச்சர்:- எவ்வளவு மானியம் கிடைத்தது?

சித்ரலேகா:- ரூ,68.37 லட்சம் தொகை, மானியத்துடன் கடன் கிடைத்தது.

முதலமைச்சர்:- திட்டம் பற்றி ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

சித்ரலேகா:- இது ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. திருப்தியாக உள்ளது. நீங்கள் இந்த திட்டத்தை அறிவித்தது மிகுந்த உதவியாக அமைந்தது. மிக்க நன்றி சார்.

முதலமைச்சர்:- உங்களுக்கு எனது வாழ்த்துகள், நன்றி.

மாற்றுத்திறனாளி சஞ்ஜெய்

மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டத்தின் மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை மூலம் பயன்பெற்று வரும் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி சஞ்ஜெயின் தாயாரிடம் பேசிய விவரம்:-

முதலமைச்சர்:- நான் முதலமைச்சர் மு க ஸ்டாலின் பேசுகிறேன். நீங்க என்ன செய்றீங்க?

சஞ்ஜெயின் தாயார்:- வணக்கம் சார். வீட்டு வேலை பார்க்கிறேன் சார்.

முதலமைச்சர்:- மாதாந்திர பராமரிப்பு தொகை வருகிறதா? எவ்வளவு வருகிறது?

சஞ்ஜெயின் தாயார்:- வங்கி மூலம் ரூ,1,500 தொடர்ந்து வருகிறது. மிகுந்த பயனாக உள்ளது.

முதலமைச்சர்:- மாற்றுத்திறனாளிகள் அலுவலக அதிகாரிகள் உங்களை முறையாக நடத்தினார்களா?

சஞ்ஜெயின் தாயார்:- நன்றாக நடத்தினார்கள்.

முதபலமைச்சர்:- வேறு எதுவும் கருத்து சொல்ல விரும்புகிறீர்களா?

சஞ்ஜெயின் தாயார்:- உங்களை நேரில் பார்த்து பேசவேண்டும்.

முதலமைச்சர்:- சரி. கலைஞர் உரிமைத்தொகை உங்களுக்கு வருகிறதா?

சஞ்ஜெயின் தாயார்:- மாதந்தோறும் 14ம்தேதி அந்த பணமும் வருகிறது. கூட பிறந்த அண்ணன் மாதிரி நீங்க உதவி செய்றீங்க.

முதலமைச்சர்:- அந்த தொகையை எதற்கு பயன்படுத்துகிறீர்கள்?

சஞ்ஜெயின் தாயார்:- பெரிய பையன் 10-ம் வகுப்பு படிக்கிறான். அவனுக்கு டியூஷன் கட்டணம் ரூ.500 கொடுக்கிறேன். பொருட்கள் வாங்கவும் பயன்படுத்துகிறேன்.

ராணிப்பேட்டை மணிகண்டன்

இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48 என்ற திட்டத்தின் கீழ் பயன்பெற்ற ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மணி கண்டனிடம் போனில் பேசினார்

முதலமைச்சர்:- சமீபத்தில் விபத்தில் சிக்கினீர்களா? ஆஸ்பதிரிக்கு அழைத்து சென்றார்கள் அல்லவா?

மணிகண்டன்:- ஆமாம். மியாட் ஆஸ்பதிரிக்கு அழைத்து சென்றனர்.

முதலமைச்சர்:- அங்கு நன்றாக சிகிச்சை கொடுத்தார்களா? இப்போது எப்படி இருக்கிறீர்கள்?

மணிகண்டன்:- ஆமாம், சிகிச்சை கொடுத்தனர். இப்போது கொஞ்சம் பரவாயில்லை.

முதலமைச்சர்:- உடம்பை கவனித்துக்கொள்ளுங்கள்.

மணிகண்டன்:- நீங்கள் பேசியதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி சார்.

செங்கல்பட்டு சுகன்யா

மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டத்தில் பயன்பெற்று வரும் செங்கல்பட்டு மாவட்டதைச் சேர்ந்த சுகன்யாவின் சகோதரரிடம் போனில் பேசியதாவது:

முதலமைச்சர்:- நீங்க என்ன செய்றீங்க?

சுகன்யாவின் சகோதரர்:- எனக்கு இரண்டு கண்ணும் தெரியாது. அக்கா சுகன்யாவிற்கு 2 கால்களும் செயல்படாது. அக்கா மகனுக்கு மூளை வளர்ச்சி இல்லை.

முதலமைச்சர்:- மாதாந்திர பராமரிப்புத்தொகை வருகிறதா? எவ்வளவு வருகிறது.

சுகன்யாவின் சகோதரர்:- ஐயா, சரியாக வருகிறது. எல்லாம் உங்கள் கருணை ஐயா. எனக்கு ரூ,1,500, சுகன்யாவிற்கு ரூ,1,500, அக்கா மகனுக்கு ரூ.2 ஆயிரம் வங்கி மூலம் வருகிறது. இந்த தொகைகளை நம்பித்தான் எங்கள் குடும்பமே உள்ளது.

முதலமைச்சர்:- மாற்றுத்திறனாளிகள் அலுவலக அதிகாரிகள் உங்களை சரியான முறையில் நடத்துகிறார்களா?

சுகன்யாவின் சகோதரர்:- நன்றாக நடத்துகிறார்கள்.

ராமநாதபுரம் கீர்த்திகாஸ்ரீ

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் பயன்பெற்று வரும் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமி கீர்த்திகா ஸ்ரீயின் தாயார் சங்கீதாவிடம் வீடியோ கால் மூலமாக பேசிய விவரம்:-

முதலமைச்சர்:- நான் யார் பேசுகிறேன் என்று தெரிகிறதா?

சங்கீதா:- தெரிகிறது சார். நன்றாக இருக்கீங்களா?

முதலமைச்சர்:- நன்றாக இருக்கிறேன். நீங்க அம்மாவா? மகள் எங்கு படிக்கிறாள்?

சங்கீதா:- அச்சங்குடி தொடக்கப் பள்ளியில் 3-ம் வகுப்பு படிக்கிறாள்.

முதலமைச்சர்:- காலை உணவை ஒழுங்காக கொடுக்கிறார்களா? திருப்தியாக உள்ளதா?

சங்கீதா:- ஒழுங்காக கொடுக்கிறார்கள். காலை 8 மணிக்கே பள்ளிக்கு மகள் சென்றுவிடுவாள். அங்கு சாப்பாடு எல்லாமே நன்றாக இருக்கிறது சார். நன்றி சார்.

இவ்வாறு அரசு திட்ட பயனாளிகளிடம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் பேசினார்.

இந்த நிகழ்வின்போது, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், முதல்-அமைச்சரின் முகவரித்துறை சிறப்பு அலுவலர் த.மோகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வெள்ளிக்கிழமை,
ஜூலை 05, 2024

# விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் "சமூக நீதிக்கு துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்ட தி.மு.க.வுக்கு வாக்களியுங்கள்" வீடியோவில் மு.க.ஸ்டாலின் வாக்கு சேகரிப்பு



சென்னை, 05 ஜூலை 2024: "சமூக நீதிக்கு துரோகம் இழைப்ப வர்களுக்கு பாடம் புகட்ட இந்திய கூட்டணி வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு வாக்களியுங்கள்" என்று விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 10ந்தேதி நடைபெற உள்ளது. இத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் 13ந்தேதி எண்ணப்படுகின்றன. விக்கிரவாண்டி இடைத்தேர்தலில், தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியில் உள்ள பா.ம.க., நாம் தமிழர் கட்சி ஆகிய கட்சிகள் மட்டுமே போட்டியிடுவதால் அங்கு மும்முனை போட்டி நிலவுகிறது. தி.மு.க. வேட்பாளராக அன்னியூர் சிவா, பா.ம.க. வேட்பாளராக சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி வேட்பாளராக டாக்டர் அபிநயா ஆகியோர் களத்தில் உள்ளனர். தேர்தலுக்கு இன்னும் 4 நாட்களே இருக்கும் நிலையில், தற்போது அங்கு பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது.

இந்த நிலையில், விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் வீடியோ வெளியிட்டு வாக்கு சேகரித்தார்.

அதில் முதலமைச்சர் ஸ்டாலின் பேசியதாவது:-

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் ஆற்றல்மிக்க தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்யுங்கள். இந்தியா கூட்டணியின் வேட்பாளராக போட்டியிடும் அன்னியூர் சிவா என்கிற சிவசண்முகத்தை உங்களுக்கு தனியாக அறிமுகம் செய்ய வேண்டியதில்லை! உங்கள் மண்ணின் மைந்தர் அவர்! மக்களோடு மக்களாக, மக்கள் பணியாற்றும் மக்கள் தொண்டர்தான் அன்னியூர் சிவா.

1986ம் ஆண்டு முதல், அன்னியூர் சிவாவை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். தடம் மாறாத - நிறம் மாறாத கலைஞரின் உடன்பிறப்புகளில் அவரும் ஒருவர். தலைவர் கலைஞரின் பாணியில் சொல்ல வேண்டும் என்றால், "தன்னால் கழகத்துக்கு என்ன லாபம் என்பதை மட்டுமே சிந்திக்கும் ரத்த நாளங்களில் ஒருவர்".

விழுப்புரம் மாவட்டம் காணை ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராக, ஒன்றுபட்ட மாவட்டத் தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக, அன்னியூர் கூட்டுறவு விவசாய வங்கித் தலைவராக, மாநில விவசாய அணி துணைச் செயலாளராக என்று பல்வேறு பொறுப்புகளை வகித்த அவர், தற்போது விவசாயத் தொழிலாளர் அணியின் மாநிலச் செயலாளராக பொறுப்பு வகித்துக் கொண்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட அன்னியூர் சிவாவை, விக்கிரவாண்டி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்து அனுப்பி வையுங்கள் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன். அன்போடு மட்டுமல்ல; உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், கடந்த 3 ஆண்டு காலத்தில் செய்து தரப்பட்டிருக்கும் நலத்திட்டங்களை விவரித்து சொல்ல வேண்டும் என்றால் நேரம் போதாது!

1 கோடியே 16 லட்சம் மகளிர் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை பெறுகிறார்கள். இந்த மாதத்தில் இருந்து புதிதாக 1 லட்சத்து 48 ஆயிரம் பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை தரப் போகிறோம். மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

'நான் முதல்வன்' திட்டத்தின் மூலமாக, இளைஞர்கள் அனைத்து வேலைகளையும் பெற தகுதி உள்ளவர்களாக உயர்த்தப்பட்டு வருகிறார்கள்.

'புதுமைப்பெண் திட்டம்' மூலமாக, அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிக் கல்விக்கு வரும் மாணவியருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. இதே மாதிரி, மாணவர்களுக்கும் 'தமிழ்ப்புதல்வன்' திட்டம் மூலமாக தரப் போகிறோம்.

இப்படி, ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஏதாவது ஒரு நேரடி பலன் கிடைக்கும் வகையில், நம்முடைய அரசு செயல்பட்டு வருகிறது.

தி.மு.க. அரசு என்றாலே, சமூகநீதி அரசு! இது உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும்!

பிற்படுத்தப்பட்டோருக்கு தனித்துறையை உருவாக்கியதே தலைவர் கலைஞர்தான். வன்னியர் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு 20 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கிய ஆட்சி, தி.மு.க. ஆட்சி!

பட்டியலின சமூகங்களின் இடஒதுக்கீட்டை அதிகரித்த ஆட்சி, தி.மு.க. ஆட்சி. அம்பேத்கர் பிறந்தநாளை, 'சமத்துவ நாளாக' அறிவித்திருக்கிறோம்! கழகம் வளர்த்த கொள்கைக் குன்றான ஏ.கோவிந்தசாமிக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது.

1987ம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில், துப்பாக்கிச்சூட்டில் பலியான சமூகநீதிப் போராளிகளுக்கான நினைவகம் கட்டிக் கொண்டிருக்கிறோம். இது இரண்டையும் சீக்கிரமே விழுப்புரத்தில் நான் திறந்து வைக்க இருக்கிறேன்.

கழகத் துணைப் பொதுச்செயலாளரும் உயர்கல்வித் துறை அமைச்சருமான பொன்முடி, மறைந்த சட்டமன்ற உறுப்பினரான புகழேந்தி இந்த மாவட்டத்துக்கும், தொகுதிக்கும் ஏராளமான திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார்கள். எல்லா மக்களுக்கும் பொதுவான மக்கள் நலத்திட்டங்கள் தொடர, உங்களின் ஆதரவை வேண்டி நிற்கிறோம்.

சமூகநீதிக்கு எதிரான பா.ஜ.க. கூட்டணியை தோற்கடிப்பது மூலமாக, சமூகநீதிக்கு துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கழகத்தின் உண்மைத் தொண்டரான அன்னியூர் சிவா என்ற சிவசண்முகம், விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்கும் உண்மையான சட்டமன்ற உறுப்பினராக இருப்பார்!

மறவாதீர், உங்கள் சின்னம் உதயசூரியன்! வாக்களிப்பீர் உதயசூரியன்!" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## திருவள்ளூரில் 15-ந்தேதி காமராஜர் பிறந்தநாள் விழாவில் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் காலை உணவுத் திட்டம்: மு.க.ஸ்டாலின் துவக்கி வைக்கிறார்



சென்னை, 05 ஜூலை 2024: அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் காலை உணவுத்திட்டத்தை, காமராஜர் பிறந்த நாளான 15ம் தேதி, திருவள்ளூர் மாவட்டம் கீழச்சேரியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இதன் மூலம் 2.20 லட்சம் மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' கடந்த 2022ம் ஆண்டு அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

முதல்கட்டமாக, 1,545 அரசு தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் 1 லட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் ரூ.33 கோடியே 56 லட்சம் செலவில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

காலை உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு அரசுப் பள்ளிகளில் மாணவ மாணவிகளின் வருகை அதிகரித்ததுடன் அவர்களின் ஊட்டச்சத்தும், கற்றல் திறனும் மேம்பட்டதாக ஆய்வுகள் தெரிவித்தன. மேலும், அண்டை மாநிலமான தெலுங்கானாவிலும், கனடா, இலங்கை ஆகிய நாடுகளிலும் அரசுப் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் கடல் தாண்டியும் பிரபலம் அடைந்த நிலையில், 2023ம் ஆண்டு தமிழகத்தில் உள்ள 30 ஆயிரத்து 992 அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரையில் படிக்கும் 15 லட்சம் மாணவ மாணவிகள் பயனடையும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

தொடர்ந்து, இந்த திட்டத்தை தமிழக ஊரகப்பகுதிகளில் இயங்கி வரும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. சட்டசபையிலும் எம்.எல்.ஏ.க்கள் பலர் இந்த கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்த நிலையில், கடந்த பிப்ரவரி மாதம் தாக்கல் செய்யப்பட்ட 2024 2025ம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் 1 முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் 2 லட்சத்து 20 ஆயிரம் குழந்தைகள் பயன்பெறும் வகையில் ரூ.600 கோடியில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், காலை உணவு திட்ட விரிவாக்கத்தை, மதிய உணவு திட்டத்தை அறிமுகப்படுத்திய காமராஜர் பிறந்த நாளான வரும் 15ம் தேதி திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீழச்சேரியில் உள்ள அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளியில் காலை 8.30 மணிக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் டி.பிரபு சங்கர் மற்றும் அரசு அதிகாரிகள் செய்து வருகிறார்கள்.

## ரூ.129 கோடி கொடுத்தால்தான் கிருஷ்ணா நதி நீர்: தமிழக அரசுக்கு ஆந்திரா எச்சரிக்கை



சென்னை, 05 ஜூலை 2024: 'கிருஷ்ணா நதி நீர் கால்வாய் பராமரிப்புக்கான பாக்கித்தொகை ரூ, 129 கோடியை செலுத்தினால் மட்டுமே பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விட முடியும்' என்று தமிழக அரசுக்கு, ஆந்திர மாநில அரசு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஒப்பந்தம்படி ஆந்திர மாநில அரசு ஆண்டுதோறும் தமிழகத்துக்கு 12 டி.எம்.சி. நீர் வழங்க வேண்டும். குடிநீர் வழங்க குறிதற்காக ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள கண்டலேறு அணையில் இருந்து, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பூண்டி ஏரி வரை 177 கிலோ மீட்டர் தூரத்துக்கு திறந்தவெளி கால்வாய் அமைக்கப்பட்டது.

இதன் பராமரிப்பு செலவுக்காக தமிழக அரசு வருடந்தோறும் ஆந்திர அரசுக்கு பணம் வழங்க வேண்டும். கிருஷ்ணா நதி நீர் பங்கீடு திட்டத்தின் படி 1996-ம் ஆண்டு முதல் கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அதன்படி மெத்தம் 112 டி.எம்.சி. தண்ணீர் பூண்டி ஏரிக்கு கிடைத்துள்ளது. இந்த நிலையில் நடப்பு ஆண்டுக்கான முதல் தவணை கிருஷ்ணா நதி நீர் வழங்கும் காலம் கடந்த 1-ந்தேதி தொடங்கியது. ஆனால் 68 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட கண்டலேறு அணையில் தற்போது 6.32 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே உள்ளது. மராட்டியம் மற்றும் தெலுங்கானாவில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால் கண்டலேறு அணைக்கு கிருஷ்ணா நதி நீர் வரத்து அதிகரிக்கும். அணை நிரம்பினால், ஆந்திராவின் பாசனத்திற்கு மட்டுமின்றி தமிழகத்திற்கு நீர் திறக்கப்படும்.

தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்றால் கிருஷ்ணா கால்வாய் பராமரிப்பு கட்டணம் பாக்கி தொகை ரூ.129 கோடி வழங்க வேண்டும் என்று ஆந்திர மாநில அரசு அதிகாரிகள் கூறியுள்ளனர். இதையடுத்து இந்த பிரச்சினையை தமிழக நீர்வளத்துறை, நிதித்துறையின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளது.

இதுகுறித்து தமிழக நீர்வளத்துறை அதிகாரிகள் கூறும்போது, 'சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் நீர் இருப்பு குறைவாக உள்ளது. இதனால் சென்னை மாநகரின் குடிநீர் தேவை கருத்தில் கொண்டு இந்த ஆண்டுக்கான முதல் தவணை கிருஷ்ணா நதி நீர் திறந்து விட தமிழக அரசு ஆந்திர மாநில அரசை கேட்டுக் கொண்டது.

தமிழகத்திற்கு நீர் திறக்க வேண்டும் என்றால் கிருஷ்ணா கால்வாய் பராமரிப்பு கட்டண பாக்கி தொகை ரூ, 129 கோடியை வழங்க வேண்டும். என்று ஆந்திர மாநில அரசு அதிகாரிகள் கூறி விட்டனர்.

8 டி.எம்.சி. மேல் தண்ணீர் இருந்தால் மட்டுமே கிருஷ்ணா கால்வாயில் பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விட முடியும். ஆனால் கண்டலேறு அணையில் 6.32 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ளதால் தற்போது திறந்து விட வாய்ப்பில்லை என்றனர்.